மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk



# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 3

- வளர்ந்திடு !
- தேவதூதர்களின் பணிகள்
- கண்திரை
- தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும்.
- உப்பு பற்றிய உவமை
- வெளிச்சத்தின் உவமை

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களியிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். இவர்கள் வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறவர்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூற வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# வளர்ந்திடு !



நாமெல்லாருமே சிறுவர்களாயிருந்த பொழுது நம்மிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி "நீ வளர்ந்த பிறகு என்னவாக இருக்கப் பிரியம் ?" என்பது. இன்று யாராவது நம்மிடம், "நீ வளர்ந்த பிறகு என்னவாக இருக்கப் பிரியம் ?" என்று கேட்டால், என்னவிதமான பதிலைக் கூறுவோம் ? இந்தக் கேள்விக்கு என்ன பதில் கொடுக்க விரும்புவோம் ?

நம்மில் பெரும்பாலானோர் நன்கு வளர்ந்து, முதிர்ச்சியும் பெற்றதால், "இப்பொழுது போய் இந்தக் கேள்வியை ஏன் என்னிடம் கேட்கிறாய் ?" என்று சிலர் கூறலாம். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், ஆண்டவரின் பார்வையில் நாமெல்லாருமே சிறு பிள்ளைகள் தான். ஏனெனில் அவருக்கு ஆயிரம் வருஷங்கள் ஒரு நாளைப் போலத்தான் இருக்கின்றது. இந்த அளவினைக் கொண்டு பார்த்தால், நாம் பிறந்த நாளில் காலை 3 மணியைக் கூட நம்மில் யாருமே காணும்படி வாழவில்லை. யாக்கோபு தன்னுடைய நிருபத்திலே, "உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிக்கிறதே" எனக்கூறுகிறான். யோவானும் தனது நிருபத்தை யாருக்கு எழுதுகிறானோ, அவர்களைத் திரும்பத் திரும்ப, "பிள்ளைகளே என்றழைக்கிறான். "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ்சசெய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்." மற்றும், "பிள்ளைகளே... அவரில் நிலைத்திருங்கள்". என்றும் எழுதுகிறான். யூதாஸ் மேலறையிலிருந்து வெளியேறிய கடைசி இராவிருந்தின்போது இயேசு தம் பதினொரு அப்போஸ்தலர்களைப் பிள்ளைகள் என்று அழைக்கிறார். "பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்களுடனே இருப்பேன்."

பவுல், "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன்" என எழுதுகையில் நாம் ஆவியிலே மிகவும் இளைஞர்கள் என்ற கருத்தை முன்வைக்கிறார். விசுவாசிகள், கருவிலே வளரும் முழுமையாக உருவாகாத சிறு பிள்ளைகள், ஏனெனில் அவர்களுக்குள்ளாக கிறிஸ்துவின் ஆவி உருவாகி வளர வேண்டியிருக்கிறது.

ஆவிக்குரிய பிரகாரமாக நாம் எந்த அளவு பக்குவப் பட்டிருக்கிறோம் ? நாம் ஏற்கனவே கிறிஸ்துவின் ஆவியால் நிறைந்திருக்கிறோமென்றும், அதன்படியே நாம் வாழ்கிறோம் என்றும் நம்மால் தைரியமாகக் கூற முடியுமா ? ஆகவே, நம்மில் பெரும்பாலானோர் இன்னும் வளர வேண்டியதிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, "நீ வளர்ந்தபின் என்னவாக இருக்கப் பிரியம் ?" என்ற கேள்வி நம்முன் இன்னும் நிற்கிறது.

வாழ்க்கையில் வளர்வது என்றால், நாம் பார்க்கும் மற்றும் சிந்திக்கும் விதத்தில் மாற்றம் ஏற்படுவது போலவே கிறிஸ்துவில் வளர்வதிலும் மாற்றம் அவசியமாகிறது. "நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப்

போலச் சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன். நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்," எனப் பவுல் தன்னைப் பற்றி விரிவாகப் பேசுகிறான். இத்தொடர் நிகழ்விற்கு அதிக காலம் பிடிக்கிறது. மேலும் இதற்கு ஜெபத்தோடு கூடிய அர்ப்பணிப்பும் முயற்சியும் தேவைப்படுகிறது. இயேசுவின் ஊழியம் முழுவதிலும் அவரைப் பின்பற்றி வந்த அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூட இன்னும் குணப்பட வேண்டியிருந்தது. இயேசு அவனைப் பார்த்து, ''நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன், நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார்.




நாம் வளரும் போது எப்படியிருக்க வேண்டு மென்பதைப் பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் தெளிவாகக் கூறுகிறான். "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திர முள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.'' நாம் எங்கு துவங்கினோமோ அங்கிருந்து முன்னேற வேண்டும். ஸ்திரமற்றதும் நிச்சயமற்றதுமான நம் நம்பிக்கைகளினின்று, திட்டவட்டமான மற்றும் கிறிஸ்துவில் உண்டான சத்தியத்திற்கு அர்ப்பணிப்பு உடையவர்களாக முன்னேறுவதோடு நாம் செல்லும் வாழ்க்கைப் பாதையில் பிறரை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்தி உதவும்படி பேச ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

ஆகவே நாம் என்னவாக இருக்க விரும்புகிறோம். என்ற கேள்விக்கு பதில் இதுதான்: "நம் தலையாகிய கிறிஸ்துவைப் போலிருக்க, வளர விரும்புகிறோம். நாம் அவரைப் போலிருந்து அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவோமாயின், அவரைப் போல் அன்புடன் சத்தியத்தைப் பேசுவோம்.

சத்தியத்தைப் பேசுவது எப்படியென்று கற்றுக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும். அன்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அன்புகூர்ந்த அப்போஸ்தலனாகிய யோவானை இயேசுவானவர் அதிகம் நேசித்தார். யோவானின் எழுத்துக்களிலேயும் அன்பை முக்கியப்படுத்துவதை நாம் காணலாம். "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்." இதே யோவான் ஒரு காலத்தில் இளைஞனாயிருந்தபோது அவசரபுத்தி உடையவனாக அதிக அன்பு இல்லாதவனாக இருந்தான். இடிமுழகத்தின் மக்கள் என்றழைக்கப்பட்ட யோவானும் அவன் சகோதரன் யாக்கோபும் ஆண்டவரைத் தள்ளினவர்களை எரித்துவிட விரும்பினார்கள். தாங்கள் உறுதியான நிலையில் இருப்பதாக இருவரும் நினைத்துக்கொண்டார்கள்." எலியா தன்னிடம் மரியாதையற்றவர்களாய் நடந்துகொண்ட மக்களை எரித்துவிடவில்லையா?" லூக்கா இவ்விதம் எழுதுகிறான். ''அவருடைய



சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது, "ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அவர் திரும்பிப் பார்த்து, "நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்," என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்".

இந்த சமயத்தில் இயேசு சிலுவையில் அறையப்படுவதை முன் வைத்து எருசலேமை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். யூதர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுவார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருந்தாலும் தமது ஊழியம் அழிவின் ஊழியல்ல, இரட்சிப்புக்கானது என்பதை இயேசுவானவர் ஒருபோதும் மறக்கவில்லை. இயேசு தம் இரு அப்போஸ்தலர்களையும் நோக்கி "வளர்ந்திடுங்கள். கொல்லுங்கற்கள்ள மக்களை இரட்சிப்பதற்கென்றே இங்கு நீங்கள் இருக்கிறீர்கள்" என அதட்டிக் கடிந்து கொண்டார்.

நாம் வளர்த்தபிறகு என்னவிதமான மக்களாக இருக்க விரும்புகிறோம்? பிறரை இரட்சிப்பதில் நாம் மும்முரமாக முயல விரும்புகிறோம். இப்படிச் செய்வதற்கு, இயேசு நம்மைப் பராமரிப்பது போல் நாமும் மற்றவர்களைப் பராமரித்திட வேண்டும். அவர் தம் உயிரையே நமக்காகக் கொடுத்தாரே, இரட்சிப்பதற்காக வந்து, நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்த இயேசுவைப் போல மேலும் அதிகமாக இருக்க விரும்புகிறோம்.

''பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு... கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை போடு கிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாக சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்''. எனப் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார்.





இப்பொழுது நாம் வளர்ந்த பிறகு என்னவாக இருக்க விரும்புகிறோம்? அதாவது கிறிஸ்துவின் ஆவியால் நிறைந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டவர்களாய், நம் இலக்கை நோக்கி முன்னே சென்று கொண்டேயிருப்போம். நம் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்தை அனுதினமும் பெற வேண்டியவர்களாய் நம் மனதை ஜீவ வார்த்தையால் நிரப்பிக்கொள்ள வேண்டும். பின்னர், காணமற்போனவர்களைத் தேடி இரட்சிக்க முயல்வதோடு, நன்மை செய்கிறவர்களாய் செல்லவேண்டும். நாம் தாமதிக்காமலிருப்போமாக. ஏனெனில் "நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது".

**- ராபர்ட் ஜே. லாயிட்**

# தேவதூதர்களின் பணிகள்

**ற்றோனி பென்சன் (நார்விச், பிரிட்டன்)**



எல்லோருமே தேவதூதர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என நாம் அறியவேண்டுமல்லவா?

''கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்" (சங்கீதம் 103:20,21). இப்பகுதியிலே நாம் மூன்று காரியங்களைக் கவனிக்கலாம்.

1. தேவதூதர்கள் தேவனுடைய கட்டளை களின்படி செயல்படுகிறார்கள். தேவனுக்கு எது பிரியமானதோ அதைச் செய்கிறார்கள்.

2. இங்ஙனம் பணியாற்றுவதற்கு அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர் சொல்வதைக் கவனித்துக் கேட்கிறார்கள்.

3. தேவதூதர்கள் ஆற்றல் படைத்தவர்கள். சொல்லப்போனால் தேவனுக்கு கொடுக்கும் பலமே அவர்களுக்கும் இருக்கிறது. தேவன் தம் பிரியத்தின்படியே தம் பலத்தை மற்றவர்களுக்கு அளிக்கிறவர்.

இக்கட்டுரையில் தேவதூதர்கள் பணியாற்றும் நான்கு விதங்களை வேதாகமம் கூறுகிறபடி பார்ப்போம்.

1.தேவனுடைய நோக்கத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்துதல்.

2. தனி மனிதர்களின் வாழ்க்கையில் வழிகாட்டுதலும் உதவியளித்தலும்.

3. தேவனின் ஜனமான இஸ்ரவேலுக்காக தேவனின் நோக்கத்தை நிறைவேற்றுதல்.

4. மொத்தத்தில் தேவனின் நோக்கத்தை தேசங்களில் நிறைவேற்றுதல்.

### தேவனது நோக்கத்தை வெளிப்படுத்துதல்

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டும் சேர்ந்த வேதாகமம் தனிமனிதர் கைகளில் கொடுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும். இது





மனுக்குலம் முழுவதற்குமான அறிவு மற்றும் போதனைக்காகப் பதிவு செய்யப்பட்டது. குறிப்பிட்ட சில நேரங்களில் தேவதூதர்கள் தோன்றி, தேவனின் பிரதிநிதியாக மனிதருக்குச் சில காரியங்களை வெளிப்படுத்தினதாக நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

யாத்திராகமம் 3:2ல் மோசே வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பொழுது "அங்கே கர்த்தருடைய தூதன் ஒருவன் முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்." "முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி (மோசே) என்று கூப்பிட்டார்" (வ.4). அந்த அதிகாரத்தின் மீதிப் பகுதியில் தேவன் தமது நோக்கம் சம்பந்தமான சில காரியங்களை மோசேக்கு வெளிப்படுத்தினார். தேவனே பூமிக்கு வந்து மனிதரிடம் பேசுவதில்லை. தேவனுக்காக, தேவதூதர்கள் வந்து பேசுவதால், சில இடங்களில் தேவனே பேசுவதாகக் கூறப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் 7ல் ஸ்தேவான் தேவனுடைய ஆவியால் நிறைந்து (6:10) பேசும்போது "சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங் கூட வனாந்திரத்திலே சபைக்குள்ளிருந்தவனும் (இஸ்ரவேல் புத்திரர்) நமக்கும் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே" என மோசேயைக் குறித்துக் கூறினான்.



''ஜீவ வாக்கியங்கள்'' என்பது மோசேயின் மூலம் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கப்பட்ட பத்து கற்பனைகள் போன்ற நியாயப் பிரமாணங்களாகும். அவைகள் ஒரு தேவ தூதனால் மோசேக்குக் கொடுக்கப்பட்டதென நாம் இங்கு வாசிக்கிறோம். ஸ்தேவான் தன் பேச்சின் பின் பகுதியில், ''தேவ தூதரைக் கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமற் போனீர்கள்" என யூதத் தலைவர்களைக் கடிந்துகொள்கிறான் (வ.53).

தானியேல் தீர்க்கதரிசிக்குப் பல்வேறு தரிசனங்களில் தேவன் தமது நோக்கத்தை வெளிப்படுத்தினதை

தானியேலின் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. சில சமயங்களில் என்ன நடக்கப்போகிறது என தனி நபர்கள் வந்து தானியேலிடம் பேசுவதாக வாசிக்கிறோம். அந்த நபர்கள் வேறு யாருமல்ல, தேவதூதர்கள் தான். தானியேல் 9ம் அதிகாரத்தில் ஒரு சம்பவத்தைப் பார்க்கிறோம். பாபிலோனில் சிறைப்பட்டிருந்த தன் மக்களாகிய யூதருடைய விடுதலைக்காக தானியேல் ஜெபம் பண்ணிய பிறகு காபிரியேல் என்னும் ஒரு ஆள் அவனிடம் வந்தார். மனிதன் என்று கூறப்பட்டிருப்பினும் காபிரியேல் ஒரு தூதன்தான். ஏனெனில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட வல்லமை அவனுக்கு இருந்ததினால் தானியேலிடம் "வேகமாய்ப் பறந்து வந்தான்" (வ.21). வருங்காலத்தைப் பற்றியும் "பிரபுவாகிய மேசியாவின்" (அவர் வேறு யாருமல்ல இயேசு கிறிஸ்துதான்) வேலையைப் பற்றியும் உள்ள ஒரு தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினான் (வ.24,27).

லூக்கா 1ல் நாம் மறுபடியும் காபிரியேலைப் பற்றி வாசிக்கிறோம். இதில் அவன் ஒரு தூதன் என்று (வ.26) அழைக்கப்படுகிறான். மரியாள் முன் தோன்றி தானியேல் 9ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட மேசியாவாகிய தேவகுமாரனின் தாயாக அவள் ஆகப்போகிறாள் என அறிவிக்கிறான். மேலும் இந்த குமாரனின் எதிர்கால வேலையைப் பற்றியும் ஒரு மனிதனின் உதவியின்றி அவள் எப்படிக் கருத்தரிப்பாள் எனவும் விளக்குகிறான்.

தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்களின் நன்மைக்கென தம் குமாரனிடம் கூறிய செய்தி தான் வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு அது ஒரு தேவதூதனால் தான் வெளிப்படுத்தப்பட்டது. இவையெல்லாமே அப்புத்தகத்தில் ஆரம்ப வசனத்திலேயே கீழ்க்கண்ட தொடராகக் கூறப்பட்டுள்ளது

தேவன் - இயேசு கிறிஸ்து - தேவ தூதன் - அப்போஸ்தலனாகிய யோவான் - விசுவாசிகள்.

மொத்தத்தில், தேவன் தம் வார்த்தையை மனிதருக்கு எப்படிக் கொடுத்தார் என நமக்குச் சொல்லப்படவில்லை. சில சமயங்களில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் புத்தகங்களில், தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு வந்தது என்றும், அதை அவர்கள் மக்களுக்கு அறிவித்துப் பின்னர் எழுதிவைத்ததாகவும் அறிகிறோம். இதைத் தேவன் தம் தூதர்களின் மூலம் செய்தார் என நாம் இதுவரை கண்ட பகுதிகளில் ஆதாரமாகக் கூறுவது சரியாகப் படுகிறது. பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்கள், புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்கள் மற்றும் நிருபங்களைப் பற்றி இவ்விதம் கூற முடியாது. ஆனால் தேவ தூதர்கள் மூலம் தேவன், தமது ஆவியைப் (அதாவது அவரின் வல்லமை) பயன்படுத்தி அவர்கள் எழுதியது தேவனுடைய வார்த்தை தான் என உறுதிப்படுத்திக் கொண்டார்.



இந்தக் காலத்திலும் தூதர்கள் இதே விதமாகச் செயலாற்றுகிறார்களா? இல்லை, அப்படிச் செய்வதில்லை. வேதாகமமானது தேவன் மனிதனுக்களித்த முழுமையான முற்றுப்பெற்ற வெளிப்பாடு. அதற்குப்பின் வந்த புத்தகங்களில், அதே தெய்வீக



அதிகாரம் காணப்படவில்லை, குறிப்பாக பிந்திய காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்.

## தேவனின் மக்களுக்கு வழிகாட்டுதல்

ஆதியாகமம் 28ல் யாக்கோபு தன் சகோதரன் ஏசாவின் கோபத்திற்குத் தப்பி, தன் குடும்ப உறவினன் வசிக்கும் சிரியாவிலுள்ள ஆரானை நோக்கி அடைக்கலம் தேடி ஓடுவது பற்றி எழுதப்பட்டுள்ளது. அவன் பயணத்தின் போது, முதல் இரவில் தூங்கும் போது "அவன் ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்படிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாக இருந்தார்கள் (வ.12). இதில் சுவை தரும் ஒரு விஷயம் என்னவெனில், 'ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும்' என எழுதப்பட்டிருக்கிறதேயொழிய இறங்குகிறவர்களும் ஏறுகிறவர்களும் என்று எழுதப்படவில்லை. இது தரும் பொருள் யாதெனில் பூமியில் இருக்கிற தூதர்கள் கட்டளைகளைப் பெறுவதற்காக வானத்திற்கு ஏறுகிறார்கள்.



வசனம் 15ல் தேவன் யாக்கோபோடே இவ்விதம் பேசுகிறார்: "நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப் பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை". முன்பின் எதுவும் தெரியாததை நோக்கித் துணிந்து சென்ற யாக்கோபுக்கு, தேவனிடமிருந்து வந்த இந்த செய்தி அதிக நம்பிக்கையைக் கொடுத்திருக்கும். அநேக ஆண்டுகளுக்குப் பின்னர், தன் வாழ்க்கையின் இறுதி கட்டத்தில் யாக்கோபு தன் மகன் யோசேப்பிடம், தேவன் மெய்யாகவே தன்னோடு கூட இருந்திருக்கிறார் என உறுதிபடக்கூறுகிறான். "என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள் முதல் இந்நாள் வரைக்கும் என்னை ஆதரித்து வந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக". (48:15,16) அநேக துன்பங்கள் மற்றும் கஷ்டங்களின் வழயாக, அவனைக் கவனித்துக் கொண்ட தூதன் மூலமாக தேவன் யாக்கோபோடு கூட இருந்தார்.

தாவீதும் தேவனுடைய மக்களுக்காக தூதர்கள் கிரியை செய்வது குறித்துப் பேசுகிறான். சங்கீதம் 34ல் பின்னணியைப் பார்ப்போம். தாவீது சவுலினால் துரத்தப்பட்டுக் கொண்டிருந்ததால், பெலிஸ்தரிடம் அடைக்கலம் புகுந்தான். அங்கு இன்னும் பெரிய கஷ்டங்கள் வந்தன. அங்கிருந்து எவ்வித இடருமின்றி தப்பித்துக் கொண்டான். "நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். இந்த ஏழை

கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (வ.4,6). தேவன் இதை எப்படிச் செய்தார்? வசனம் 7 நமக்கு இதற்கான பதிலைத் தருகிறது. "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." வேதத்திலுள்ள பெரிய மனிதர்களின் வாழ்கையில் மட்டும் தேவன் தூதர்கள் மூலம் கிரியை செய்கிறார் என்பதில்லை. விசுவாசிகள் அனைவருடைய வாழ்க்கையிலுமே அதே விதமாகச் செயலாற்றுகிறார்."



முக்கியமானதும், திடநம்பிக்கையைத் தருவதுமான இந்த சத்தியத்திற்குப் புதிய ஏற்பாட்டில் வலுவூட்டபட்டிருக்கிறது. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் தூதர்களைப் பற்றி ''இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (1:14) என எழுதப்பட்டிருக்கிறது. எல்லா மக்களிடமும் தேவன் தம் தூதர்களின் மூலமாய் கிரியை செய்வதில்லை. தேவனுடைய இரட்சிப்பின் வழிகளை அறிந்து, அதைப் பின்பற்ற ஆயத்தமாயிருப்போரிடம் மட்டுமே கிரியை செய்கிறார். இருப்பினும் மக்களை இந்த வழிக்குள் கொண்டு வருவதும் இச் செய்தியில் அடங்கியிருக்கிறது. வேதத்தில் கூறிய படி தேவனுடைய இரட்சிப்பின் வழியை இந்தப் பத்திரிகை மூலம் கற்றுக்கொள்கிறாயெனில், தேவ தூதர்கள் உன் வாழ்க்கையில் கிரியை செய்வதனால் தான் இவ்வழியை முதன் முதலாய் கற்றுக்கொள்கிறாய் எனலாம். தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு வெளிப்படுத்தும் வேலை அவர்களுக்கு முடிந்து போனாலும், விசுவாசிகளின் வாழ்க்கையில் அவர்கள் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள்.

### இஸ்ரவேலுக்காகச் செயலாற்றுதல்

யாக்கோபின் வாழ்க்கையில் தேவன் எவ்விதம் தூதர்கள் மூலம் செயலாற்றினார் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். யாக்கோபிலிருந்து வந்த சந்ததியான இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் தேவன் எவ்விதம் தூதர்கள் மூலம் கிரியை செய்தார் என வேதம் நமக்குச் சொல்கிறது. தேவன் ஒரு தூதன் மூலமாக அக்கினி எரியும் செடியில் மோசேக்குக் காரியங்களை வெளிப்படுத்தினதைப் பார்த்தோம். அந்த நேரத்தில் தேவன் மோசேயிடம், "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்" என்கிறார். எகிப்திலே இஸ்ரவேல் ஒரு ஜனமாக உருவானபின், இன்றளவும் தேசமாக தேவனின் மக்கள் தான் எனினும் மகத்தான இந்த மேன்மைக்குத் தகுதியற்றவர்களாய் நடந்ததன் விளைவாக தேவனின் தண்டனையை வருவித்துக் கொள்கிறார்கள்.



ஏசாயா 63ல் தம் மக்களாகிய இஸ்ரவேலுக்கு அருளும் பெரிய நன்மை பற்றி கூறுகிறார். இந்த நன்மையின் ஒரு பகுதி தேவனின் தூதன் அவர்களைப் பராமரித்ததில் காட்டப்பட்டது. ''அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் (தேவன்) நெருக்கப்பட்டார். அவருடைய சமுகத்தின் தூதன் அவர்களை இரட்சித்தார்" (வ.9). இந்த தூதனைப் பற்றி யாத்திராகமம் 23:20-23ல் வாசிக்கிறோம். அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களைக் கொண்டு வருவதும் அவர்கள் அதைச் சுதந்தரிக்கச் செய்வதுமே அவரின் வேலை. ''வழியில் உன்னைக் காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுப்போய்ச் சேர்க்கிறதற்கும் இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். (வ.21 மற்றும் 23 பாக்கவும்) வசனங்கள் 21, 22ல் அவர்கள் மேல் தண்டனையைக் கொண்டு வருவார் என்றும், அவர்கள் கீழ்ப்படிந்தால் அவர் ஆசீர்வாதத்தின் ஊற்றாயிருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் புத்திரரின் விதவிதமான அனுபவங்களைப் பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்கள் விவரிக்கின்றன. ஆசீர்வாதம் மற்றும் அவர்கள் சத்துருக்களின் மேல் வெற்றி கண்ட காலங்கள், சாபமும் போரில் தோல்வியும் கண்ட காலங்களில். பொதுவாகக் கண்ணுக்குப் புலப்படாத தூதர் சேனை பற்றிய காட்சி எப்போதாவது வருவதைக் காண்கிறோம். யோசுவா 5:13-15 ஓர் எடுத்துக்காட்டு. எரிகோவை முற்றுகையிடுவதற்கு முந்தின நாளில் தன்னைக் 'கர்த்தருடைய சேனையின் அதிபதி' என்று சொல்லிக் கொண்ட ஒருவரை யோசுவா என்ற தலைவன் சந்திக்கிறான். அவரைத் தேவதூதன் என யோசுவா தெளிவாகத் தெரிந்து கொண்டவனாய் தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டான். தூதர் சேனையின் அதிபதியென்றால் ஒரு பெரிய தூதர்சேனைக்கு அவர் அதிபதி. கண்ணுக்குத் தெரியாத அந்த மாபெரும் சேனை எரிகோவைப் பிடிப்பதற்கும், பின்னர் அந்த நாடு முழுவதைப் பிடிக்கவும் இஸ்ரவேல் புத்திரருக்கு உதவுவதற்காகப் பணியாற்றினார்கள்.

அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பில் இருந்தார்கள். அவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்ப வரவேண்டுமென தானியேல் தீர்க்கதரிசி கருத்தாய் விண்ணப்பம் பண்ணினான் - எரேமியா தீர்க்கதரிசனம் கூறினபடி. 9ம் அதிகாரத்தில் தானியேலின் ஜெபத்திற்குப் பதிலாக, தேவன் காபிரியேல் தூதன் மூலமாக செய்தி அனுப்பினதை ஏற்கனவே நாம் பார்த்தோம். 10ம் அதிகாரத்தில் தானியேல் துக்கத்தோடும் உபவாசத்தோடும் 21 நாட்கள் இருந்தான். இதற்கான காரணம் யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பும் காலம் வர வேண்டுமென அவன் வாஞ்சித்தான். இந்த நாட்களின் முடிவில் ஒரு தூதன் வந்து அவன் ஜெபம் கேட்கப்பட்டது. ஆனால் அவனால் உடனே வரமுடியவில்லை என்றான். ஏனெனில் "பெர்சிய இராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். இன்னொரு தூதனின் உதவியால் மட்டுமே அரசனை மேற்கொள்ள முடிந்தது" எனக் கூறினான்.

இங்கே நடந்தது என்ன? பெர்சியாவின் அரசன் கோரேஸ் யூதர்களை நாடு திரும்ப அனுமதிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்க இந்த தூதர்கள் முயன்றதாக நாம் நம்புகிறோம். எஸ்றா புத்தகத்தின் ஆரம்பத்தில் கோரேஸ் இந்த அனுமதியளித்த அறிக்கையைப் பார்க்கிறோம். எஸ்றாவின் புத்தகத்தில் தூதர்களின் செயல் பற்றி

எதுவும் கூறப்படவில்லை. ஆனால் யூதர்கள் நாடு திரும்ப, தூதர்கள் திரை மறைவில் வேலை செய்ததைப் பற்றி தானியேல் 10 ஓர் சிறிய காட்சியைத் தருகிறது. எல்லா யூதர்களும் நாடு திரும்பவில்லை. இருப்பினும் எஸ்தர் புத்தகத்தில் பெர்சிய சாம்ராஜ்யத்திலுள்ள யூதர்கள் அனைவரையும் கூண்டோடு அழிக்க முயற்சி எடுக்கப்பட்டாலும், ஒரு யூதப் பெண் சரியான நேரத்தில் பெர்சியாவின் அரசியாக உயர்த்தப்பட்டதினிமித்தம் அந்த சதித்திட்டம் தகர்க்கப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. தானியேல் 10ன் படி பார்த்தால், மனிதக் கண்களுக்குப் புலப்படாவிடினும், தூதர்கள் தாம் அந்த சதித்திட்டம் முறியடிக்கப்படுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கியிருக்க வேண்டும்.

ஆகவே தேவனுடைய மக்களாகிய இஸ்ரவேலருக்காகத் தூதர்கள் தொடர்ந்து செயலாற்றியிருக்கிறார்கள் என நாம் நம்புகிறோம். நீண்டகால சிறையிருப்புக்குப் பின் இஸ்ரவேல் நாடு திரும்புவதைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பலவற்றை நாம் வேதத்தில் காண்கிறோம். கடந்த நூற்றாண்டில் அவை நிறைவேறிவிட்டன. அப்படி நிறைவேறுவதற்கேற்ப ஏற்பட்ட சந்தர்ப்பசூழ்நிலைகள் கவனிக்கத்தக்கன.

முதல் உலகப் போரின்போது, பிரிட்டிஷ் அரசு யூதர்களுக்கென்று பாலஸ்தீனத்தில் ஒரு சொந்த தேசம் அமைப்பதற்குத் தாங்கள் சாதகமாயிருப்பதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அந்தப் போரின் விளைவாக அந்த தேசத்தின் ஆட்சியுரிமை யூதர்களுக்கு வழங்கப்பட்டது. அதனால் வாக்குத்தத்தம் நிறைவேறுவதும் சாத்தியமாயிற்று. 1947ல் ஐக்கிய நாடுகளின் சபை யூதர்கள் அந்நிலத்தின் ஒரு பகுதியில் சுதந்திர நாட்டை அமைத்து இயங்க அனுமதித்தது. குறைந்த எண்ணிக்கையுள்ள, போதிய ஆயுத பலமில்லாத யூதர்கள் 1948ல் சுற்றியுள்ள அரேபியப் படைகளோடு போரிட்டு, ஐ.நா.சபை நிர்ணயித்ததை விடப் பெரிதான இடத்தில் சுதந்தர நாட்டை அமைத்தார்கள்.

1967ல் ரஷ்யாவும் எகிப்தும் திட்டமிட்டு போரைத் துவக்கினாலும், இஸ்ரேல், எகிப்தை ஒரேயடியாக மண்ணைக் கவ்வ வைத்தது. மிகக் குறைந்த காலத்தில் சிரியாவும் ஜோர்டனும் தங்கள் எல்லையைப் பெரிதாக்கியதோடு பழையஎருசலேம் நகரத்தையும் கைப்பற்றிக்கொண்டார்கள். 1973ல் நடந்த ஒரு திடீர் தாக்குதலில் எகிப்தும் சிரியாவும் இஸ்ரேலை மேற்கொள்ளும் நிலையில் இருந்தாலும், தங்களுக்கு சாதகமாக எதையும் வற்புறுத்தாத காரணத்தால், இஸ்ரேல் படைகள் ஒன்று கூடி வெற்றிபெற முடிந்தது. இந்தக் குறிப்பிடத்தக்க சம்பவங்களில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செயல்பட்டத்தைப் போலவே, தூதர்கள் இஸ்ரேலுக்காகச் செயலாற்றினார்கள் என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

## தேசங்களின் நடுவே கிரியை செய்தல்

இஸ்ரேல் மக்களின் வரலாறு சார்ந்த தீர்க்கதரிசனங்கள் மட்டும் வேதாகமத்தில் அடங்கவில்லை. பிற தேசங்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் அதில் அடங்கியுள்ளன. அவைகளில் அநேகம் ஏற்கனவே நிறைவேறி, வேதாகமம் தேவனுடைய வார்த்தையே என்பதற்குச் சான்று பகருகின்றன. தேவனுக்கிருக்கும் முன்னறிவின்படி இத்தீர்க்கதரிசனங்கள் முன்னறிவிக்கப்பட்டன என்பதில்லை. தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற தேசங்கள் மத்தியில் மும்முரமாக செயல்படுகிறார் என வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.



இப்படி பவுலும் அத்தேனே பட்டணத்தாரிடம், ஜனங்களை "பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" எனக் கூறுகிறான் (அப்போஸ்தலர் 17:26). அதாவது எவ்வளவு காலம் ஒரு தேசத்திற்கு வல்லமை இருக்கிறது மற்றும் அந்த தேசத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதைப் பற்றிய கூற்று அது. பாபிலோன் சாம்ராஜ்யத்தின் அதிபதியான நேபுகாத்நேச்சாரிடம் தானியேல் தீர்க்கதரிசி "ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிற தேவனைப்" பற்றிக் கூறினான் (தானியேல் 2:21). பின்னொரு நாளில் நேபுகாத்நேச்சார் அவனது பெருமையின் நிமித்தம் தேவனால் சிறுமைப்படுத்தப்பட்டு, ஏழு ஆண்டுகளுக்கு ஒரு மிருகம் போல் நடந்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டான். ஒரு கனவின் மூலம் அவன் தேவனால் கீழ்க்கண்டவாறு எச்சரிக்கப்பட்டான். "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தாவன்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது" என்றான். (4:17). 'காவலாளர்' மற்றும் 'பரிசுத்தவான்கள்' என்பது தூதர்களே. இந்த வசனம் தேசங்களின் மத்தியில் கிரியை செய்வது தேவன் என்பது மட்டுமல்ல, தமது சித்தத்தைத் தூதர்கள் மூலம் தேசங்களில் நடப்பிக்கிறார் என்றும் போதிக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்களை அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கொடுக்க தூதன் பயன்படுத்தப்பட்டான் என முதலிலேயே பார்த்தோம். அப்புத்தகத்தில் தூதர்கள் சிறப்பான பங்கு வகிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, 8,9 அதிகாரங்களில் தூதர்கள் தொடர்ச்சியாக எக்காளங்களை ஊதுகிறார்கள். ஒவ்வொரு எக்காளம் ஊதப்படும் போதும் பூமியில் சம்பவங்கள் நிகழ்கின்றன. 16ம் அதிகாரத்தில் இதன் தொடர்ச்சியாக தூதர்கள் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின் மேல் ஒருவர் பின் ஒருவராக ஊற்றுகிறார்கள். ஒவ்வொரு கோபகலசமும் ஊற்றப்படும் போது பூமியின் மேல் காரியங்கள் நிகழ்கின்றன. வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள தரிசனங்கள் அனைத்துமே தீர்க்கத்தரிசனங்கள் தாம். அவை அப்போஸ்தலனாகிய யோவான் காலம் தொடங்கி, இன்றுவரையுமுள்ள நூற்றாண்டுகளாக நிறைவேறிவருவதோடு இனிவரும் காலங்களிலும் நிறைவேறும். இப்புத்தகத்தில் தூதர்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகிறார்கள்? இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படி இத்தனை நூற்றாண்டுகளாக அவர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் சில தீர்க்கதரிசனங்கள் நாம் வாழும் இக்காலத்திற்குரியவை அல்லது சீக்கிரத்தில் நடைபெறப் போகும் சம்பவங்களாகும். இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் வேதத்தின் வேறு சில இடங்களிலும் உண்டு. அவை தேவனுடைய நோக்கம் தேசங்களில் நிறைவேறி, இயேசு கிறிஸ்து மீண்டும் வந்து மனித அதிகாரத்தை ஜெயித்தவராய் தேவனுடைய ராஜ்யத்தை அமைப்பதில் நிறைவு பெறுகிறது.

*- டோனி பென்ஸன் (நார்விச், இங்கிலாந்து)*

# கண் திரை



ஒரு சமயம் நான் என் குதிரை யாங்க்கியின் மீது சவாரி செய்து கொண்டிருந்தேன். திடீரென ஒரு வாத்து அருகிலிருந்த செடிகளிலிருந்து என் குதிரையின் பாதங்களுக்கு அருகில் பறந்து வந்து வீழ்ந்தது. யாங்க்கி, ஒரு பக்கமாக குறித்து ஒதுங்கியதில், நான் இருக்கையில் இருப்பதற்குப் பிராயாசபட்டதில் தசை ஒன்று சுளுக்கிக் கொண்டது. என் குதிரையை நான் குறை கூற முடியாது. ஏனென்றால் அதன் சுபாவமே அதுதான்.

குதிரைகள் இரையாகும் மிருகங்கள். தங்கள் புத்திசாலித்தனத்தாலும் வேகமாக ஓடும் ஆற்றலாலும் காடுகளில் அவை உயிரோடு வாழ முடிகிறது. பலதலைமுறையாக வீடுகளில் பழக்கப்பட்டவையாயிருந்தாலும் இந்தத் தனித்தன்மை வாய்ந்த குணங்கள் அவைகளிடம் தொடர்ந்து காணப்டுகின்றன. பயிற்சியின் போது மேற்கொள்வதற்கு அரிதான குணங்கள் இவை பயத்தில் அலறி தாறுமாறாய் ஒடும் குதிரையில் சவாரி செய்வது இனிமையான ஆனுபவம் அல்ல. தன்னைச் சுற்றிலும் ஆபத்தையே பார்க்கிஹது. ஒரு சின்ன பிளாஸ்டிக் பை காற்றில் ஆடினால் போதும், அது ஒரு அச்சுறுத்தும் பொருளாகத் தெரிகிறது. நிழல் உருவங்கள் ராட்சச உருவங்களாகத் தோன்றுகின்றன. பயிற்றுவிப்பதில் பொறுமையும், நம்பிக்கையினாலுண்டான பிணைப்பும் குதிரைக்கு நிம்மதி அளிப்பதோடு, பயந்து குதிக்கும் நேரங்களும் குறைகின்றன.

மக்கள் தினந்தோறும் குதிரையைப் பயன்படுத்த வேண்டியிருந்த காலத்தில், குதிரைகள் ஓரக்கண்ணால் பார்ப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, குதிரைகளின் கண்களுக்குத் திரை போட்டார்கள். குதிரைகள் கண் ஓரங்களில் பார்க்கும் அற்புதமான திறமை படைத்தவை. தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கும் திறன் படைத்தது குதிரை. அதன் தலை முன்னோக்கி இருந்தால் கூட அது அப்படி அமைக்கப்பட்டிருப்பதன் காரணம். இதை கொல்லிகள் அதன் பின்னாலிருந்து வருவதைக் காண முடியும். ஒரு குடும்பத்தினர் ஏறியுள்ள வண்டியை இழுத்துச் செல்லும் குதிரை, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது குறித்துக் கவலைப்படக்கூடாது. மாறாக தனக்கு முன்னாலிருக்கும் சாலையில் தான் அதன்



முழு கவனமும் இருக்கவேண்டும். அதைத் தான் குதிரையின் கண் திரை செய்கிறது. பந்தையக் குதிரைகள் கண்திரை போட்டிருப்பதால், தங்கள் முன்னால் இருப்பதில் கருத்தூன்றி ஜெயிப்பதில் முனைப்பாயிருக்கின்றன.

கிராண்ட் கேனியனைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பற்றி நான் வாசித்தேன். பயத்தில் கிட்டத் தட்ட செயலிழந்த நிலைக்கு வந்துவிட்டாள். தன் நீண்ட கைச் சட்டையால் கண்களுக்குத் திரை போட்டுக்கொண்டு ஒவ்வொரு அடியாக தன் முன்னே உள்ள பாதையில் காலடி வைத்து நடந்து, ஒரு வழியாகத் தன் சுற்றுலா நடையை முடித்தாள்.

நமக்குக் கூட அடிக்கடி கண்திரை தேவைப்படுகிறது. பாதையை விட்டு நம் கவனத்தைச் சிதறடிக்கிற அனைத்தையும் தடை செய்ய அது உதவுகிறது. நம்மைச் சுற்றியுள்ள உலகம் நம்மை பயமுறுத்த முடியும். அல்லது நம்மை ஆசை காட்டி மயக்கவும் கூடும். இரண்டுமே நாம் சத்தியதித்ல நடக்கும்போது ஊறு விளைவிக்கும். தன்னைச் சுற்றியுள்ள காற்றையும் அலைகளையும் பார்க்க ஆரம்பிக்கும் வரை பேதுரு தண்ணீரின் மேல் நடந்துகொண்டிருந்தான். காற்றும் அலையும் பார்த்து அவன் பயந்தபொழுது அவன் மூழ்க ஆரம்பித்தான். அவன் பார்வை நேராகத் தன் ஆண்டவரை நோக்கி இருந்தவரை, அவன் நன்றாகத்தான் டந்தான். நாமும் அதே மாதிரிதான். நான் எதிரே உள்ள இலக்கை நோக்கி நம் கண்களை வைத்து, கவன்ததைச் சிதறடிப்பவை மற்றும் பயமுறுத்துபவைகளைத் தள்ளி வைப்போமெனில் நாம் போய்ச் சேரவேண்டிய இலக்கை பத்திரமாய்ப் போய்சேர்வோம்.

ஆனெற் ஹாலற்றன்


**தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும். யோபு 37:14**



உன் புத்தியினாலே ராஜாளி பறந்து, தெற்குக்கு எதிராகத் தன் செட்டைகளை விரிக்கிறதோ ?

அப்படியென்றால் அவை யாருடைய ஞானத்தினால் பறக்கின்றன ? (யோபு 39:26) வடக்கு எது, தெற்கு எது என அவை எவ்விதம் அறிந்துகொள்கின்றன ? ஆர்க்டிக் டெர்ன் என்ற சிறிய கடல் பறவை, துருவத்துக்கு துருவம் ஒரு நீள்வட்டப் பாதையில் ஆச்சரியமான விதமாக ஆகாயத்தில் பறந்து செல்வதும், திசையைக் கண்டறிந்து சிறிதும் பிழையின்றி பறப்பதும் மர்மமாகவே உள்ளது. இவை மணிக்கு 31 மைல் வீதம், காற்று துணை புரிந்தால் இன்னும் வேகமாகவும் பறக்கக்கூடும். இனப் பருக்கம் செய்யாத காலத்தில், 8 மாதங்களில் 24,000 மைல்களில் போவதும்

வருவதுமான சுற்றை முடிக்கின்றன. இவை இடையில் எங்கும் தங்காமல் மணிக்கணக்காக வானில் பறக்கின்றன.



இப்பறவைகளின் நம்புதற்கியலா வான்வழிப் பயணங்கள், ''இது எங்ஙனம் சாதியமாகும்? என விமரிசகரைக் கேள்வி கேட்கத் தூண்டுகின்றன. சில சமயங்களில் தனியாகவே பறந்து, குளிர்காலப் புகலிடத்திற்கு மிகச் சரியாக வந்து சேருகிறது. அதுவும் ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வருகிறது. ''அது தன் மூளையில் ஒரு காலமானி, ஒருவித உயரமானி மற்றும் வடிக்கமாக வலசை போகும் பாதைக்கான வரைபடாங்களை வைத்திருப்பது போல் தோன்றுகிறது".

"நான் உன்னைக்கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல் யோபு 38:3,4"

இத்தகைய கேள்விகளுக்குப் பரிணாகக்கொள்கையினர் பதில் கூற முடியாமல் திண்டாடுகிறார்கள். ஒரு 747 விமானத்தின் பாதைகாட்டிச் செலுத்தும் கருவியின் அமைப்பைப் பாருங்கள். இந்த முழு அமைப்பையுமே ஆர்க்டிக் டெர்ன் என்ற சிறு டைல்பறவை தன் தலைக்குள் வைத்திருக்கிறாற் போத் தோன்றுகிறதே. ஒரு சோதனையாக, வலசை வாங்கும் பறவைகளின் முட்டைகளைத் தனியே அடைக்காது, குஞ்சு பொறிக்க வைத்து, அவை ஓரளவு வளர்ந்த பின் அவற்றை விடுவித்துப்பறக்கவிட்ட உடனேயே வழக்கமாக அவை இருக்கவேண்டிய இடத்திற்கே பறந்து போயின. இங்கும் சர்வஞானியான சிருஷ்டிகரின் செயலையே காண்கிறோம்.



நீள்நெடுங்காலமாய் அனைத்து நாடுகளிலும் சிதறுண்டிருந்த இஸ்ரவேல் மக்கள் இப்பொழுது "மேகத்தைப் போலவும், தங்கள் பலகணித் துவாரங்களுக்குத் தீவிரிக்கிற புறாக்களைப் போலவும் பறந்து வருகிறார்கள்" ஏசாயா 60:3)

அவர்களுக்கும் கூட அவர்களின் காலம் தெரிகிறது.



# உப்பு பற்றிய உவமை

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13) என்று இயேசு கூறினார்.

மிகப் பண்டைய காலத்திலிருந்தே பயன்பட்டு வரும் பொருள் உப்பு. உணவுப் பொருள் கெடாமல் பாதுகாக்கவும், உணவிற்கு ருசியைக் கொடுப்பதற்கும் உப்பு பயன்படுகிறது. குளிர்பதனம் பழக்கத்திற்கு வருமுன்பிலிருந்தே உப்பு உணவிற்கு இன்றியமைதாததாக இருந்திருக்கிறது. உப்பு இல்லையென்றால் அது நிறம் மாறி கெட்டுப் போகிறது. ஆகவே பண்டைய நாகரிகங்களில் உப்பு மதிப்பு மிக்கப் பொருளாக இருந்து வந்தது. இங்கே, இயேசுவானவர் உணவிற்கு உப்பு சுவை கொடுக்கும் தன்மையாப் பற்றிக் கூறி, மக்களை அதற்கு ஒப்பிடுகிறார். அவர் கூற விரும்புவது என்னவெனில், சாந்தம், இரக்கம், இருதய சுத்தம், நீதியை விரும்புதல் ஆகிய குணங்களை வெளிப்படுத்தி, தேவன் விரும்பும் முழுமையை உடையவர்கள் தங்கலுடன் பழகும் மக்களுக்கு ஒரு செழுமையைக் கொடுக்கிறார்கள் என்பதே. உப்பு தன் சாரத்தை இழந்து பயனற்றும்ப் போவதைப் போல இந்த குணங்களையும் நாம் எளிதில் இழந்துவிடக்கூடும். இயேசுவைப் பின்பற்றுவதன்மூலம் "உப்பின் சுவையைக் காக்க வேண்டும்" கடுமையான காலங்களிலும் சிறப்பான சீஷத்துவம் காக்கப்பட வேண்டும். எதிர்ப்பு, நிந்தை, அவமானம் மற்றும் சுய பரிவின் போதும் கூட ஒரு சீஷனின் விசுவாசம் காக்கப்பட வேண்டும். பவுல் அபோஸ்தலன் இதற்கு சம்பந்தமான மிகவும் பயனுள்ள சில கருத்துக்களை நம் முன் வைக்கிறான்.

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரதுடன் ஜெபத்தில் விழித்திருங்கள். புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாக நடந்து, காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயு மிருப்பதாக" (கொலோசெயர் 4:2,5-6).

கெட்ட வார்த்தை, கிறிஸ்துவிந் சீஷர்களின் உரையாடல்குக்குத் தகுதியற்றவை. அது நல்லதல்ல. பாதுகாத்தல் என்பதற்கு எதிரான கெடுதலுக்கே துணை போகிறது. இதற்கு நேர் மாறாக, நல்லதும் உப்பைப் போல் முழுமையான வார்த்தைகள் அவற்றின் சம்பந்ததினால் சுத்திகரிப்பதுடன் பாதுகாப்பதாவும் இருக்கிறது.

ஆகவே நற்செய்தியானது, நாம் ஏற்றுக் கொள்ளும் உபதேசங்களின் தொகுப்பைக் காட்டிலும் மேன்மையானது. மனிதனை மாற்றுகிற அறிவானது இருளின் மத்தியில் ஒரு நபரை ஒளியாகவும், கட்டின் மத்தியில் உப்பாகவும் இருக்க உதவுகிறது. புரிந்து கொள்ளுதல் நம்மை வேறுபட்டவர்களாக ஆக்குகிறது.

நாம் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று ஆய்த்தமாகிற ஒரு விசேஷித்த மக்கள் கூட்டம் கிறிஸ்துவின் சீஷன். இந்த உலகத்தானல்ல (1யோவான் 2:15) அவனின் கண்ணோட்டம் மற்றும் இலட்சியங்கள் தேவனுடைய வார்த்தையையும், அவரின் நோக்கத்தையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அவன் தனித்திருப்பது முற்போக்கானதே தவிர பிற்போக்கானது அல்ல. பவுல் தன்னைப்பற்றி, வகையில் தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் (1ரோமர் 1:1) எனக் குறிப்பிடுகிறான்.

# வெளிச்சத்தின் உவமை



எங்கு ஒளி உள்ளதோ, அங்கு இருள் இருக்க முடியாது. ஒளி, இருளுக்கு விரோதமானதல், அதை விரட்டி விடுகிறது. நீ மின் விளக்கை எரியச் செய்யும் போது இருள் மறைந்துவிடுகிறது. நிஜ வாழ்க்கையில் உண்மையாக இருப்பது உவமானங்களிலேயும் உண்மையாக இருக்கிறது. வேதாகம மொழியில், ஒளியானது அறிவு, ஒழுக்கம். உயிர் என்பவைகளோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது. ஆனால் இருளை அறியாமை, ஒழுக்கச் சீர்கேடு மற்றும் மரணத்தோடு இணைத்துப் பேசுகிறோம். அப்போஸ்தலனாகிய யோவாந் தன் நற்செய்தி நூலில் இயற்கை ஒளியையும் ஆவிக்குரிய தன்மையையும் இணைத்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

“அவருக்குள் ஜீவன் இருநத்து, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை” (யோவான் 1:4-5)

“ஒளி பிரகாசிக்கிறது” என்பது இயேசுவின் வார்த்தையும் குணசீலமும், அறியாமை மற்ஹு௱ம் பொல்லாங்கு நிறைந்த உலகில் அறிவிக்கப்படுதலைக் குறிக்கிறது. இயேசு தம் பிரசங்கத்தின்போது ஆண்களும் பெண்களும் தமது போதனைக்குச் செவிகொடுத்து, அதை உள்வாங்கிக்கொண்டு, இருளான இடத்தில் ஒளியாக மாறும்படி அவர்களை அழைத்தார்.

“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் முடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் பட்த்தும்படி, உங்கள் வெளிச்சம் அவ்ரகல் முன் பிரகாசிக்கக் கடவது” (மத்தேயு 5:14-16)

இங்கே மிகத் தெளிவான கட்டளை ஒன்றை இயேசு விசுவாசிகளுக்குக் கொடுக்கிறார். கிறிஸ்துவிந் போதனையினால் அறிவைப் பெற்ற அனைவருமே இருள் நிறைந்த தங்கள் உலகிலே ஒளிகளாக மாறியாக வேண்டும். இதன் பொருள் யாது ? பவுல் அபபோஸ்தலன் இங்கே நம் உதவிக்கு வருகிறார்.

‘‘கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கும், எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.”(பிலிப்பியர் 2:14-15)

ஆகவே, நாம் நம் பணியிடம், வீடு, விளையாடும் இடம் சொல்லப்போனால்



எல்லா நேரங்கல் மற்றும் எல்லா இடங்களிலும் நடந்து கொள்ளும் விதம் அல்லது குணசீலத்தின் மூலம் நம் விசுவாசத்தை அறிவிக்கிறோம். நாம் சாதிக்கவேண்டிய முதல் காரியம் என்னவெனில் “சரியான மனப்பான்மைகளை” வளர்ப்பதுதான். பிறரைக் குறித்து பெருந்தன்மையோடு கூடிய கண்ணியமான மனப்பான்மையில்லாமல், சரியான கோட்பாடுகளை நம்புவது மட்டுமே போதாது. நாம் பாவியை நேசிக்கவேண்டும், ஆனால் பாவத்தை வெறுக்கவேண்டும். அந்த நபரைக் குறித்த அக்கரை வேண்டும், ஆனால் தீமையை வெறுக்கவேண்டும். கனிவும் மனதுருக்கமும் கொண்டவர்களாக, துன்ப நேரத்தில் பிறர் நம்மைத் தேடிவரக் கூடியவர்களாக இருக்கவேண்டும். “உலகத்தை, நேசியாமல், நம் அயலானை” நேசிக்க வேண்டும்.



“நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்”. (கலாத்தியர் 6:10)இது ஒரு பொல்லாத உலகம். அநேகர் உடலுறவு, அருவருப்புகள், ஓரிசனச்சேர்க்கை மற்றும் பலருடன் உடலுறவு போன்றவற்றால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தொலைக்காட்சி, வீடியோ மற்றும் படக்காட்சிகள் மூலம் இலட்சகணக்கானோரின் தினசரி ஆகாரம் வன்முறையும் ஒழுக்கக்கேடும் தான் என்றாகிவிட்டது. சாராயமும் போதைப்பொருளும் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. அநேகமாக அனைவரையுமே ஆட்கொண்டு விட்டது. இவைகளெல்லாமும் இன்னும் அநேகமும் மொத்தத்தில் “உலகம்” என்று விவரிக்கப்படுகின்றன. இவைகளோடு நமக்கு எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாது.

“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்...... மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய......” (1யோவான் 2:15-16)

இங்கு கூறப்பட்டுள்ள இச்சைகள் நம்மைச் சுற்றியுள்ள உலகில் மட்டுமல்ல நம் சொந்த உள்ளங்களுள்ளும் காணப்படலாம். தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் பிற கேளிக்கை சாதனங்களின் மூலம், பிறரின் பாவங்களை ஒரு பக்கம் ரசித்துக் கொண்டு அதே சமயம் அவர்களைக் கேவலமாக நினைப்பபது நமக்கு சுலபமாகிறது. “உன் அயலானி அன்பு கூராதே” உலகத்தை நேசி, என இயேசு சொல்வது போல நினைத்துக் கொண்டு வாழ்வது சுலபம். “இருளான இடத்திலே ஒளியாக” நாம் இருக்கவேண்டுமானால், எது சரியானதோ எது நல்லதோ அதையே நாம் செய்வோம். அப்பொழுது தேவனை ஆராதிக்கிறோம் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் யாரும் நம்மைக் குறைகூறவோ விமர்சிக்கவோ முடியாது. அப்பொழுது நாம் உண்மையிலேயே இருளான இடத்திலே ஒளியாக நின்று, தேவனுக்கு மகிமையைச் செலுத்துவோம்.